மாகாணத் திறைசேரி ~ வடமாகாணம்
Provincial Treasury – Northern Province
පළාත් භාණ්ඩාගාරය - උතුරු පළාත

(130)

My No:-NP/09/FRM/2010 19.12.2010

மாகாணத் திறைசேரி சுற்றுநிருப இல: **PT/18/2010**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

## அரசாங்க நிறுவனங்களில் தேங்கிக் கிடக்கும் அகற்றப்பட வேண்டிய பொருட்களைத் துரிதமாக அகற்றுதல்

அரசாங்க நிறுவனங்களில் அகற்றப்பட வேண்டிய பொருட்களை மா.நி.வி.369 இன் பிரகாரம் வருடாந்த இருப்புப் பொருள் சுற்றாய்வு மூலமும், கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் அல்லது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் தேவை எனக் கருதுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அழிந்து போகின்ற தன்மையுடைய பொருட்கள், சுற்றாய்வுச் சபையின் அறிகையின்றியும் தள்ளுபடி செய்வதற்கு இத்தால் அறிவுறுத்தப்படுகின்றது.

அ. ஏற்கனவே பொருட்கள் சுற்றாய்வு செய்யப்பட்டு அகற்றப்பட வேண்டிய பொருட்கள் கண்டறியப்பட்டிருப்பின் அப் பொருட்களை உடனடியாக அகற்றப்படுதல் வேண்டும்.

ஆ. இதுவரை பொருட்கள் சுற்றாய்வு செய்யப்படவில்லை எனினும் அகற்றப்பட வேண்டிய பொருட்களை கண்டறிந்து அப்பொருட்களுக்கு நிதிப் பிரமாணத்திற்கு புறம்பாக பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படலாம்.

1. வருடாந்த பொருட்கள் சுற்றாய்வு நடாத்தப்படும் வரை அகற்றப்பட வேண்டிய பொருட்களுக்கு (பழுதுபார்க்க முடியாத, பாவனையில் இருந்து அகற்றப்பட்ட, பழுது பார்த்தல் பொருளாதார ரீதியில் பயனற்ற சொத்துக்கள், பொருட்கள்) சுற்றாய்வு சபையொன்றை நியமனம் செய்து அகற்றும் நடவடிக்கைக்காக அப்பொருட்களை சிபார்சு செய்தல்.

2. அவ்வாறு அகற்றுவதற்கு சிபார்சு செய்த பொருட்களை வருடாந்த சுற்றாய்வின் போது தெளிவாக இனங்காணக்கூடியவாறு பட்டியிலிடப்பட்டு பொருட்கள் பதிவேடு, தொக்குகள் பதிவேடு, மற்றும் சொத்துக்கள் பதிவேடுகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

3. அப்பொருட்கள் சம்பந்தமாக மேலே கூறப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டு துரிதமாக அகற்றுதல்.

169

Kanniya Road, Varothaya Nagar, Trincomalee.
Phone No. DCS(F) Direct - 026-2226974 General No - 026-3266503
Fax - 026 -2226953 E-Mail – nptreasury@sltnet.lk

ஈ. அமைச்சுக்கள், திணைக்களங்கள் இப் பொருட்கள் அகற்றுதல் நடைமுறைகளினூடாக கிடைக்கப் பெறும் வருமானங்களை மாகாண சபையின் பொருத்தமான வருமானத் தலைப்பிற்கு வரவிடப்பட வேண்டும். அகற்றப்பட்ட சகல பொருட்கள் சம்பந்தமாக கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கையொன்றும் சமர்ப்பித்தல் வேண்டும்.

உ. மேற்கூறப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதன் மூலம் அமைச்சுக்கள், திணைக்களங்களில் நீண்டகாலமாக தேங்கிக் கிடக்கும் பொருட்களை அகற்றலாம். அமைச்சுக்கள், திணைக்களங்களை யாழ்ப்பாணத்திற்கு நகர்த்தும் போது தேவையற்ற விதத்தில் பொருட்கள் நகர்த்தலை தவிர்க்க முடியும் என்பதோடு போக்குவரத்துச் செலவுகளையும் குறைத்துக் கொள்ளவும் முடியும்.

ஊ. அமைச்சுக்கள், திணைக்களங்களை யாழ்ப்பாணத்திற்கு நகர்த்துவதற்கு முன்பாக 2010ம் ஆண்டுக்கான பொருட்கள் சுற்றாய்வு செய்யப்பட்டு இருப்புப் பதிவேடுகள், பொருட்கள் பதிவேடுகள் சமப்படுத்தப்பட வேண்டும்.

எ. 31.12.2010ம் திகதி அனைத்து வழங்கல்களும் முடிவுறுத்தப்பட்டு இருப்புப் புத்தகங்கள் சமப்படுத்தப்பட வேண்டும்.

ஏ. பொருட்களை அகற்றுதல் தொடர்பாக மேலதிக தகவல்களிற்கு மாகாணத் திறைசேரியினால் வெளியிடப்பட்ட NP/09/FRM/2009 இலக்க 09.12.2009ம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

அ.மனோரஞ்சன்
பிரதிப் பிரதம செயலாளர் – நிதி,
பிரதம செயலாளருக்காக
வட மாகாணம்.